வழங்கியிருக்கிறோம். அதற்கான திட்ட ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஆய்வு செய்து அதற்குள்ள பெனிபிட்-காஸ்ட்-ரேஷியோ எல்லாம் பார்த்து, எவ்வளவு ஏக்கர்களுக்குப் பாசன வசதி கொடுக்க முடியும், அதனுடைய திட்ட மதிப்பீடு என்ன என்பதை எல்லாம் ஆய்வு செய்து, அதற்கான முழு முடிவை இந்த அரசு எடுக்கும். அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10.25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 311, திரு. ம. தனபால். இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

311–

திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரையுள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் அளித்தல்.

****19095*—திரு. ம. தனபால்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

கிழக்கு கடற்கரை சாலையில், திருவான்மியூர் முதல் மாமல்லபுரம் வரை உள்ள மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது குறித்து அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவான்மியூரிலிருந்து மகாபலிபுரம் வரை உள்ள கடற்கரைச் சாலைகளிலே மிகச் சிறப்பான முறையிலே பல கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதில்லை. ஆனால் ஒரு சிலர் அனுமதி இல்லாமலேயே சில கட்டிடங்களை அங்கே

கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவும் இல்லை. ஆகவே, அனுமதி பெற்று, அங்கே கட்டிடம் கட்டுவதற்கு நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும் என்றும், அதுவும் சுற்றுலாப் பயணிகள் அதிகமான பேர்கள் அங்கே வருகை தருகின்ற காரணத்தால், அங்கே சுற்றுலா ஓட்டல்கள் கட்டுவதற்கும், சிறந்த கட்டிடங்களைக் கட்டுவதற்கும், கடற்கரைச் சாலைகள் ஓரம் அழகாக அமைப்பதற்கும் சாத்தியக்கூறாக இருக்கும். ஆகவே, இதனை ரத்து செய்து, இதுபோன்ற நல்ல கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதியின்றி எந்தக் கட்டிடங்கள் கட்டவும் அனுமதிக்கப்படுவதில்லை. அப்படி மீறிக் கட்டப்பட்டு இருக்கிற கட்டிடங்களை இடிப்பதற்காக உரிய துறைகள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். திருவான்மியூர் முதல் மகாபலிபுரம் வரை உள்ள பகுதியில் நிலத்தடி நீர்நிலையைக் காக்கும் பொருட்டு கட்டிடம் கட்டவும், மனைப்பிரிவு அங்கீகரிக்கவும், அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது. திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உள்ள பகுதியில் சென்னைப் பெருநகர் முழுமைத் திட்டத்திலும் உத்தண்டி முதல் மகாபலிபுரம் வரை உள்ள பகுதிகள் மகாபலிபுரம் முழுமைத் திட்டம் மற்றும் மகாபலிபுரம் புதுநகர் அபிவிருத்தித் திட்டத்திலும் அமைகின்றன. இந்திய அரசின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்தால் கடலோர அபிவிருத்திக் கட்டுப்பாடு விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்விதிகளை அந்தந்த உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்கள் ஏதேனும் தேவைப்பட்டால் அதைச் செய்து நடைமுறைப்படுத்த இவ்வரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, கடலோர கட்டுப்பாடு விதிகள் பற்றி முடிவெடுத்தபின், மனைப்பிரிவுகளை அங்கீகரிக்கவும், அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவதை ஊக்குவிக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக இந்த முடிவுகள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 312, திருமதி இலதா பிரியகுமார், இருக்கையில் இல்லை. திரு. கே. செல்வராஜ், *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*